# பெயர்பலகை சர்ச்சை: அமலாக்க நடவடிக்கையில்

# பாகுபாடு ஏதுமில்லை

## டாக்டர் ஸலிஹா விளக்கம்

கோலாலம்பூர், டிச. 2- இன சார்பானது என சந்தேகிக்கப் பட்ட வணிக பெயர்பலகை விதிமுறைகளை மாநகர மன்றம் (டி.பி.கே.எல்). சமீபத்தில் அமல்படுத்தியதை கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாஃபா தற்காத்துள்ளார்.



விளம்பர (கூட்டரசுப் பிரதேசம்) துணை சட்டங்கள், உள்ளாட்சி சட்டம், டேவான் பஹாசா டான் புஸ்தாகா சட்டம் ஆகியவற்றுக்கு ஏற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

நோக்கத்துடன் செயல்பட்ட அமலாக்கம் என்ற கூற்றுகளை நிராகரித்த அவர், 2024 ஆம் ஆண்டு முழுவதும் 13 நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டார்.

அந்த நடவடிக்கைகளின் போது 264 நோட்டீஸ்கள் வெளியிடப்பட்டு 36 வணிக நிறுவனங்கள் விதிமுறைகளை பின்பற்றவில்லை என்பதற்காக சட்ட நடவடிக்கைக்கு இலக்காகின. அங்கீகரிக்கப்படாத அல்லது அனுமதிக்கப்படாத பெயர்பலகைகளை பயன்படுத்தியதும் குற்றச் செயல்களில் அடங்கும் என்றார் அவர்.

இந்த நடவடிக்கைகள் அரசியல் ரீதியான நோக்கமுடையது அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகத்தை இலக்காக வைத்து எடுக்கப்பட்டது என கூறப்படுவதை அவர் மறுத்தார்.

இந்த பிரச்சினையை பெரிதுப்படுத்துவதை தவிர்க்குமாறு அரசியல்வாதிகளையும் பொது மக்களையும் கேட்டுக் கொண்ட டாக்டர் ஸலிஹா, இத்தகைய செயல்கள் பிரிவினைகளைதான் உருவாக்கும் என்று குறிப்பிட்டார்.